DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

CC. No. 31/2024 Crime No. 412/2023 Station Bhavani

| | | | |
|---|---|---|---|
| Name | PW5-திரு.கிருஷ்ணமூர்த்தி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 20.11.2024 |

**எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது சேலம் மாநகரம் சூரமங்கலம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் பவானி வட்டக் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது கடந்த 28.10.2023 ம் தேதியன்று மாலை 15.45 மணிக்கு, நிலைய உதவி ஆய்வாளர் திரு.கோபால் என்பவர் நிலைய அலுவலிலிருந்தபோது பவானி அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற சக்திவேல் என்பவரது RTA Brought Death இன்டிமேசனை பெற்றும் அன்றைய தினம் மாலை 17.30 மணிக்கு பவானி குருப்பநாயக்கம்பாளையத்தை சேர்ந்த குருநாதன் மகன் விஸ்வநாதன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலையக் குற்ற எண் 412/2023 இதச 279, 304(A) பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் புலன் விசாரணைக்காக வழக்குக் கோப்பை பெற்ற நான் அன்றைய தினம் மாலை 18.30 மணிக்கு சம்பவயிடம் சென்று, சம்பவயிட சாட்சிகளான சங்கர் மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு, பார்வை மகசரும் மற்றும் மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் விஸ்வநாதன், கிருபாகரன், கார்த்திக், த/பெ.முனியப்பன், சங்கர், கார்த்திக், த/பெ.மோகன் ஆகியோர்களை தனித் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் மறுநாள் 29.10.2023 ம் தேதியன்று பவானி அரசு மருத்துவமனைக்கு காலை 06.15 மணிக்கு சென்று அங்கு இவ்விபத்தில் இறந்து போன சக்திவேல் என்பவரனின் பிரேதத்தை பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இறப்பின் மருத்துவரீதியான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை தலைமை காவலர் திரு.மூர்த்தி என்பவர் மூலம் பிரேத விசாரணைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் சாட்சிகள் தியாகராஜன், வரதராஜ், கோபாலகிருஷ்ணன் மற்றும் ராஜா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சி விஸ்வநாதன் என்பவரை மறு விசாரணை செய்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் 30.10.2023 ம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி

அங்குசாமி என்பவரை கைதுக்கான காரணம் கூறி, கைது செய்தும், தக்க நிலைய பிணையில் விடுவித்தேன்.

பின்னர் விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 01.11.2023 ம் தேதியன்று சாட்சி சம்பத்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 11.11.2023ம் தேதியன்று மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். **TN 87 A 5783 என்ற பதிவெண் கொண்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் இவ்விபத்தில் இறந்துபோன சக்திவேல் என்பவருக்கு முதல் உதவி சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பிரேத பரிசோதனை செய்த மருத்துவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன்.**பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த தலைமை காவலரையும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நான் எனது புலன் விசாரணையை முடித்து 11.11.2023 ம் தேதியன்று, எதிரி மீது இதச 279, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றாலும், ஆவணங்கள் தயார் செய்யப்படவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யப்படவில்லை என்றாலும், ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. முறையாக புலன் விசாரணை செய்யப்படாமல் எதிரி மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எதிரியின் அஜாரக்கிரைதையால் தான் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல.